ராணி
காமிக்ஸ்
கரும்புலி
தோன்றும்
கொள்ளையர்
படை
ரூ.3

வாங்கிவிட்டீர்களா...?

"ராணி முத்து" காலண்டர்-2000

★ வீட்டுக்கு அழகுதரும் முருகன் படம்

★ கொஞ்சமும் தவறு இல்லாத பஞ்சாங்கக் குறிப்புகள்

★ நாள்தோறும் நல்லநேரம் குறிக்கப்பட்டு உள்ளது

இப்பொழுது வேகமாக விற்பனையாகிறது. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்!

"ராணி பிரிண்டர்ஸ்", சென்னை—600 007.

ராணி காமிக்ஸ் – 374
(மாதம் இருமுறை இதழ்)
TV
ஜனவரி 16 – 31
2000

கருப்புலி தோன்றும்

கொள்ளையர் படை


அந்த அடர்ந்த காடு அன்று வழக்கம் போல விடிந்தது. இரண்டு காட்டுவாசிகள் தேன் எடுக்க காட்டுக்குள் சென்றுகொண்டிருந் தார்கள்.
சின்னா! போன மாதம் நமக்கு நிறைய தேன் கிடைத் ததே!
சிக்கா! இந்தமுறை நாம் கிழக்குப் பக்கம் போனால் போன முறையைவிட அதிகமாக தேன் கிடைக்கும்!


ஆனால் அடர்ந்த காட்டுக்குள் செல்ல வேண்டுமே! கரடி, புலி, சிங்கங்கள் எல்லாம் அலையுமே!
அவைகள் நம்மை எதையும் செய்யாது!

திடீரென்று—
சின்னா அங்கே பார்!
காட்டுக்குள்ளே— ஒரு கரடி வந்துகொண்டிருந்தது.
அட....! என்ன அழகான கரடி! அதுவும் நம்மைப் போல தேனைத் தேடி செல்கிறது போலிருக்கிறது!
கரடி! அதுபாட்டுக்கு அதன் பாதையில் செல்கிறதே! ஆபத்து விட்டது என்று நாம் நம் வழியே செல்லவேண்டியதுதான்!

அதே நேரம்—
டுமீல்...!
என்ன துப்பாக்கி சத்தம்!
கரடியின் காலில் துப்பாக்கிக்குண்டு பட்டுஇரத்தம்வடிந்தது.வலி பொறுக்க முடியாமல் கரடி அலறியது.
உர்ர்ர்ர்ர்....!
சின்னாவும், சிக்காவும் அடிபட்ட கரடியை பார்க்க ஓடினார்கள்.
கரடிக்கு என்ன ஆயிற்று!
யார் இதை சுட்டுத் தள்ளியது!
உர்ர்ர்ர்ர்...!
உர்ர்ர்ர்ர்...!
கரடி வலியில் முனகியது


திடீரென்று– இரண்டு பேர் துப்பாக்கியுடன் அவர்கள் முன்னே தோன்றினார்கள்.
ஹா...ஹா.... ஹா...ஹா...!
ஏய்..... யார் இந்த காட்டுவாசிகள்?
இவர்கள்தான் கரடியை சுட்டிருக்கிறார்கள்!

சின்னாவும், சிக்காவும் அவர்களை தாக்க முயன்றார்கள். ஆனால் அதற்குள் அவர்கள் இருவரும் இவர்களை முரட்டுத்தனமாக தாக்கினார்கள்.
முட்டாள்! என்ன தைரியமிருந்தால் எங்களைத் தாக்க வருவீர்கள்?
ஆ...!
கும்...!

அப்போது மேலே மரங்களுக்கிடையே ஒரு ஹெலிகாப்டர் வந்தது.

உடனே அந்த நகரவாசிகள் காட்டுவாசிகளை அப்படியே விட்டு விட்டு சென்றுவிட்டார்கள்.

ஆ...ஆ...! யார் இவர்கள்? அவர்களுக்கு இங்கே என்ன வேலை?
வா... அந்த கயவர்களைப்பற்றி தலைவரிடம் சொல்லலாம்!

ஆமாம்! விரைவாகச் சொல்ல வேண்டும்!


சின்னாவும், சிக்காவும் தலைவரிடம் வந்தார்கள்.
அவர்கள் எதற்காக காட்டுக்குள் வந்திருக் கிறார்கள் தெரியுமா?
எங்களுக்குத் தெரியாது தலைவரே!

அதே நேரம்— அதிகாலை பொழுது என்பதால் பறவைகளும், மிருகங்களும் தங்கள் இருப்பிடங்களை விட்டு புறப்பட்டு இரை தேடச் சென்றன. அதை கரும்புலியும், டைகரும் ரசித்துக்கொண்டிருந்தார்கள்.
என்னை யாரோ அழைப்பது போல என் உள்மனது சொல்கிறதே!

கரும்புலியும் டைகரும் மலை உச்சிக்கு வந்து காட்டை உற்று நோக்கினார்கள்.
சந்தேகமில்லை! யாருக்கோ ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது! ஆமாம்! தலைவர்தான் என்னை அழைக்கிறார்! அவர் எதற்காக என்னை சந்திக்க விரும்புகிறார்!

வேகமாகச் செல்ல வேண்டுமே? எப்படிச் செல்வது? வா டைகர்!

கரும்புலி காட்டில் வேக வேகமாக நடந்தார்.
நடந்து சென்றால் சூரியன் மறைவதற்குள் போய் சேர முடியாது!

வரும் வழியில் கரும்புலி ஆற்றைக் கண்டார்.
ஆற்று வழியாக சென்றால் விரைவில் சென்றுவிடலாம்! நீரோட்டம் வேறு அதிகமாக இருப்பது வசதியாகி விட்டது!


கரும்புலி திடீரென்று ஆற்றில் இருந்து ஒரு பாறையை மேலே தூக்கினார்
இதோ என் படகு தயாராக இருக்கிறது! வா டைகர் புறப்படலாம்!
கரும்புலி ஆற்றில் படகை மூழ்க வைத்து அதன் மேல் பாறையை வைத்திருந்தார்.


கரும்புலியும் டைகரும் படகில் ஏறி விரைந்தார்கள்.
தலைவர் எதற்கு நம்மை அவசரமாக அழைக்கிறார்? அங்கே என்ன நடந்திருக்கும்....?
கரும்புலிக்கு பலவித சிந்தனைகள் எழுந்தன. ஆற்று நீரோட்டம் படகை வேகமாக இழுத்துச் சென்றது.


கரும்புலி விரைவில் தலைவரை சந்தித்தார்.
தலைவரே! எதற்காக என்னை அழைத்தீர்கள்?
பிறகு சொல்கிறேன்! பயணக் களைப்பில் இருக்கிறாய். முதலில் சாப்பிடு.


தலைவர் கரும்புலிக்கு பழங்களை சாப்பிடக் கொடுத்தார்.
தலைவர் ஏன் அமைதி காக்கிறார்! என்ன நடந்திருக்கும்

பிறகு—
கரும்புலி! நீதான் எங்களுக்கு பாதுகாவலர்! எங்களுக்கு வழிகாட்டி!
தலைவரே! என்ன சொல்கிறீர்கள்?
தலைவரின் வார்த்தைகள் கரும்புலிக்கு புரியாதபுதிராக இருந்தது.

கரும்புலி! காட்டில் நடக்கக்கூடாததெல்லாம் நடக்கிறது!
என்ன சொல்கிறீர்கள் தலைவரே!


நகரத்தில் இருந்து இரண்டு தீவிரவாதிகள் இங்கே வந்திருக்கிறார்கள்! அவர்கள் காட்டு மிருகங்களை அடித்து சாப்பிடுகிறார்கள்! நம்முடைய ஆட்கள் சின்னாவையும் சிக்காவையும் காயப்படுத்தியிருக்கிறார்கள்!
அப்படியா...?

அவர்கள் என்ன கொண்டு வந்திருக்கிறார்கள்?
எனக்குத் தெரியவில்லையே.


அப்போது இயற்கையை ஆராய்ச்சி செய்யக்கூடிய ஆல்பர்ட் அங்கே வந்தார்.
தலைவர் எல்லாம் சொல்லியிருப்பார் என நினைக்கிறேன்!
ஆமாம்! அவர்கள் யார்?
அவர்கள் நகரத்தில் இருந்துதான் காட்டுக்குள் வந்திருக் கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை!


ஆனால் அவர்கள் வேட்டைக்கு வந்தமாதிரித் தெரியவில்லை!

வேட்டைக்கு வருபவர்கள் ஹெலிகாப்டரில் வரமாட்டார்கள்!
அப்படியானால்...?


அவர்கள் வேறு ஏதோ காரணத்துக் காகத்தான் காட்டில் முகாமிட்டிருக் கிறார்கள்!
கரும்புலி! நீதான் அவர்களை கண்டு பிடிக்க வேண்டும்!
ஆகட்டும் தலைவரே!

உடனே கரும்புலி சின்னாவையும் சிக்காவையும் அழைத்துப் பேசினார்.
நாங்கள் தேன் எடுக்க காட்டுக்குச் சென்றோம்!
கிழக்குப் பக்கமாக சென்றோம்!
அங்கே ஒரு அழகிய கரடியைப் பார்த்தோம்.
திடீரென்று யாரோ அதை சுட்டுத்தள்ளினார்கள்.
டுமீல்...!

அப்போது இருவர் துப்
பாக்கியுடன் வந்தார்கள்.
ஹா...
ஹா... ஹா...
நாங்கள் அவர்களை தாக்குவதற்குள்
அவர்கள் எங்களை தாக்கிவிட்டார்கள்!
அம்மா...!
கும்...!
அவர்கள் காட்டுக்குள் எதற்காக வந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை!
இந்நேரம் வரை அவர்கள் காட்டுக்குள்தான் இருக்கிறார்கள்!


பிறகு—
தலைவரே! நான் போய் அவர்கள் யார் என்று கண்டுபிடிக்கிறேன்!
பத்திரம் கரும்புலி! அவர்களைப் பார்த்தால் மிகவும் ஆபத்தானவர்களைப் போலத் தெரிகிறது!
ஆபத்துடன் விளையாடுவது என்றால் கரும்புலிக்கு பிடித்தது ஆயிற்றே.
உடனே கரும்புலி புறப்பட்டார்.
கரும்புலி மரக்கிளைகளை பிடித்து மரத்துக்கு மரம் தாவிச் சென்றார்.
கொர்ர்ர்ர்ர்ர்...!
அங்கே அடிபட்ட கரடி முனகிக் கிடந்தது.

காயம்பட்ட கரடியை விட்டுச் சென்றிருக்கிறார்கள். அப்படியானால் வேடிக்கைக்காக சுட்டிருக்கிறார்கள்!

கரும்புலி கரடியை தூக்கிப் பார்த்தார்.
உனக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது! பயப்படாதே!

கரும்புலி கரடியை ஆதரவாக தடவிக் கொடுத்தார்.
உன்னை சுட்டுவிட்டு அவர்கள் எங்கே போயிருப்பார்கள்!
கரடி கரும்புலியின் பேச்சு புரிந்தும் புரியாதது போல தலையை ஆட்டியது.


ஓ.கோ.! இந்த வழியாக போயிருக்கிறார்களா?
உடனே கரும்புலி சில மூலிகைச் செடிகளைப் பறித்து கரடியின் காயத்துக்கு மருந்து போட்டார்.
ஓ.கே. நீ புறப்படு. இனி உனக்கு ஆபத்தில்லை! அவர்களை நான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்!
பிறகு கரும்புலி பதுங்கிப் பதுங்கிச் சென்று அவர்களைத் தேடினார்.


ஓர் இடத்தில்—
இது என்ன சத்தம்! ஆற்றுக்கு அந்தப் பக்கமாக இருந்துதான் வருகிறது!


கரும்புலி ஆற்றுக்குள் இறங்கி சத்தம் வராதபடி ஆற்றின் மறுகரையை நோக்கி நீந்திச் சென்றார்.
நான்கூட இந்த இடத்தை இதுவரை பார்த்ததில்லையே?

ஆற்றுக்கு நடுவே தீவு போல ஓர் இடம் இருந்தது.
ஒரு குகையும் தெரிகிறதே!
கரும்புலி குகை வாயிலுக்கு வந்தார்.
குகை எங்கே போகிறது!
இப்போது அந்த சத்தம் மிக அருகில் கேட்கிறதே!
குகையின் மேலே ஒரு சிறு இடைவெளி இருந்ததை கரும்புலி பார்த்தார்.
அங்கிருந்து விளக்கொளி வருகிறது!
உள்ளே யார் இருப் 'பார்கள்!
உடனே கரும் புலி மேலே ஏறி அந்த இடைவெளி வழியாகப் பார்த்தார்.


குகைக்கு அந்தப் பக்கம்—
வில்சன்! இந்த முறை பயணம் எப்படி இருந்தது!
நன்றாக இருந்தது! ஆனால் எதுவும் கிடைக்க வில்லை!
அங்கே ஹெலிகாப்டர் தளமும் உருவாக்கப்பட்டிருந்தது.

ஹெலிகாப்டர் வந்து இறங்கியது.
நல்லது! பொருட்களை எடுத்து உள்ளே குடோனில் வை!
ஓ.கே. சார்!

ஆர்.டி.எக்ஸ். வெடிகுண்டு பெட்டிகளை ஆற்றுக்குள் பதுக்கி வையுங்கள்!
ஓ.கே. பாஸ்!


வெடிமருந்துகளை ஹெலிகாப்டரில் இருந்து எடுத்து குடோனுக்கு மாற்றினார்கள்.
இந்த வெடிப் பொருட்களை நாம் வெர்மீனியாவுக்கு மாற்ற வேண்டும்!
எதற்காக?

அடக்கடவுளே ! இவைகளை வெர்மீனியாவுக்கு கடத்தப் போகிறீர்களா ?
ஏதோ விபரீதம் நடக்கிறது !
ஆனால் குகையில் காவலுக்கு இருந்தவர்கள் கரும்புலியைப் பார்த்தார்கள்.
யார் அது ?


காவலர்கள் இருவரும் கரும்புலி மீது ஆயுதங்களுடன் பாய்ந்தார்கள்.
ஏய்... யாருடா நீ? என்ன தைரியமிருந்தால் எங்கள் கோட்டைக்குள் நுழைந்திருப்பாய்...?


பாதுகாவலர்கள் கரும்புலி மீது பாய்ந்தார்கள்.
ஆ...!
அவன் கரும்புலியை மேலே இருந்து அழுத்தினான்.

ஆனால் கரும்புலி அவனை அலேக்காகத் தூக்கினார்.
முட்டாள்! நேருக்கு நேர் வந்து மோர்துடா! உனக்கு சாவு நெருங்கிவிட்டது!
ஆ...!
கரும்புலி இருவரையும் கடுமையாகத் தாக்கினார்.
அம்மா!
இது எப்படி இருக்கு?
உங்கள் திட்டத்தை தவிடிபொடியாக்குவேன்!

யார் அந்த டிசோசா! சொல்லுடா!
ஆ...! கழுத்து! என்னைவிடு! சொல்கிறேன்...!
டிசோசாதான் அகில உலக தாதா.
அவன்தான் கடத்தல் சாம்ராஜ்ஜியத்தில் சிகரமாக இருக்கிறான்!

அவனுடைய நோக்கம் என்ன? காட்டுக்குள் எதற்காக வந்திருக் கிறார்கள்?
எங்கள் தலைவர் டிசோசாதான் போருக்குத் தேவையான வெடிகுண்டு களையும், வெடிமருந்துகளையும் அனுப்பி வைக்கிறார்!
வெர்மீனியாவினர்கள் நம் நாட்டை விரைவில் தாக்கப் போகிறார்கள்.


துரோகிகளே! சொந்த நாட்டை கூறு போட நீங்களே துணை போகிறீர்களா?
டிசோசாவின் பங்களா முழுக்க தங்கமும் வைரமுமாக குவிந்துகிடக்கின்றன.

ஓகோ...! பணத்துக்காக நாட்டை அழிக்கப் பார்க்கிறீர்களா?
எங்கள் தலைவரிடம் போகலாம்!
அவனிடம் போய் நான் இங்கு இருக்கிறேன் என்று சொல்!
கரும்புலி இருவரையும் குகைக்குள் தள்ளி விட்டார்.
உங்களுக்கு இது ஓய்வெடுக்கக் கூடிய நேரம்!
அய்யோ எங்களை விட்டுவிடு!
அவர்களை குகைக்குள் தள்ளி விட்ட கரும்புலி ஒரு பெரிய கல்லை உருட்டி குகை வாயிலை அடைத்தார்.

அதே நேரம் டிசோசா.
இன்னும் நான்கே இரவுகள்தான்... அதன்பிறகு ஹாஹா... ஹாஹா....!
வெர்மீனியா நாட்டு ஜனாதிபதி நமக்காகத்தான் காத்திருப்பார்!
நம்முடைய முதலாவது லோடு கப்பல் இன்னும் சிறிது நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து விடும்!
அதன்பிறகு கோடிக்கணக்கான பணம் நம் கைக்கு வந்துவிடும்! அடுத்த 24 மணி நேரத்துக்குள்! ஹா...ஹா...ஹா...!
டிசோசா எகத்தாளமாகச் சிரித்தான்.

டிசோசாவின் சிரிப்பொலி காட்டையே அதிர வைத்தது.
வெர்மீனியர்கள் இன்னும் சில தினங்களில் நம் நாட்டுக்குள் புகுந்து விடுவார்கள்!
நாமும் வெர்மீனியராக மாறத்தான் வேண்டுமா பாஸ்?
கரும்புலி அங்குலம் அங்குலமாக அந்த இடத்தை சோதித்துக் கொண்டே வந்தார்.
கண்டிப்பாக! நாம் வெர்மீனியாவினருக்கு உதவுவதை நாடே கவனித்துக் கொண்டிருக்கிறது!


இந்த மரத்தில் ஏறி
இரவுவரை காத்திருக்க
வேண்டியதுதான்!

உடனே கரும்புலி மரத்தின் விழுதைப் பிடித்து
சரசரவென்று ஏறத் தொடங்கினார்.


மரத்தின் உச்சிக்கு சென்றவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.
அட! இங்கிருந்து பார்த்தால் தீவிரவாதிகளின் முகாம் முழுவதுமாகத் தெரிகிறதே!


உடனே கரும்புலி மரத்தை விட்டு இறங்கி பதுங்கி பதுங்கிச் சென்றார்.


அங்கே இருந்த ஒரு குடிசை
யின் சன்னல் வழியாக கரும்
புலி உள்ளே பாய்ந்தார்.
அடேயப்பா! ஒரு சிறிய ராணுவக் கிடங்கு போல இருக்கிறதே!
கரும்புலி அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துப் பார்த்தார். ஒரு கைத்துப்
பாக்கியை எடுத்தார்.
துப்பாக்கி கைக்கு அடக்கமாக இருக்கிறதே!
ஒவ்வொன்றாக நோட்டமிட்டார்.

அப்போது இரண்டு கண்கள் கரும்புலி யின் செய்கையை கண்காணித்தது.
என்ன தைரியம்?
!
அதற்குள்—
ரிக்கி, ஜாக்கி வேகமாக ஓடிவாருங்கள்!
நம்மை யாரோ பார்த்துவிட்டார்கள்!
உடனே கரும்புலி மின்னல் வேகத்தில் செயல்பட்டார்.
இங்கே வர எவனுக்குத் தைரியம் வந்தது?
அதோ சுடு!
இப்போது சண்டையிடுவதற்கான நேரம் இல்லை!

சட்டென்று கரும்புலி ஓட்டம் பிடித்தார். பாறையின் விளிம்பில் போய் நின்றார்.
இந்த பாறைக்கு அடியில் பதுங்கிக் கொள்ள வேண்டியதுதான்
ஏய்... அவனை தப்பிக்க விடக் கூடாது!


கரும்புலி கீழே குதித்து பாறைக்கு இடையே சாய்ந்துகொண்டார்.
இருட்டில் அவர்களால் நம்மை அடையாளம் காண முடியாது!

கரும்புலி அந்த இடத்தைவிட்டு வேறு இடத்துக்கு மாறுவதற்குள் ஒருவன் அவரைச் சுட்டான்.



குண்டு தோள்பட்டையில் பதிந்தது.


குண்டடிபட்டதும் கரும்புலி மயங்கியவரைப் போல படுத்துக்கொண்டார்.
ஹா... ஹா...! அவனை இறுக்கமாக கட்டிப்போடு!


கரும்புலியின் கை கால்களை கட்டி டிசோசாவின் அறைக்கு கொண்டுவந்தார்கள்.
பாஸ்! இவன் அத்துமீறி நம் இடத்துக்குள் நுழைந்துவிட்டான்!
இவன் எப்படி உள்ளே வந்தான்?

தெரியவில்லை பாஸ்!
இவன் காட்டுவாசி! நம்மைப் பற்றி இவனுக்கு என்ன தெரியப்போகிறது?
இவனைப் பார்த்தால் ஒற்றன் போலத் தெரிகிறது!
அப்படியா?
அப்படியானால் இவனை அனுப்பவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடலாமே!
ஓ.கே. பாஸ்! அப்படியே

நாளை அவன் சாவதை நான் என் கண்ணால் பார்க்க வேண்டும்!


இரண்டு காவலர்கள் கரும்புலியின் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

நேரம் ஆக ஆக இருவருமே தூங்கிவழிந்தார்கள்.
கொர்ர்ர்...!
நான் மயக்கமாகி இருக்கிறேன் என்று நினைத்து தூங்கி விழுகிறார்கள் !
கரும்புலி அப்படியே குப்புற விழுந்து தரையில் மெல்ல மெல்ல நகர்ந்து வந்தார்.
மெழுகுவர்த்தியை எப்படியாவது நெருங்க வேண்டும் !

நெருப்பில் காட்டி கயிற்றை அறுத்துவிட வேண்டியது தான்!
கரும்புலி தன் கட்டுக்களை மெழுகுவர்த்தி நெருபபில் காட்டி கயிற்றை அறுத்தார்.
மறுநிமிடம்– கரும்புலி மெதுவாக கதவருகே வந்தார்.
கதவு திறந்துதான் இருக்கிறது!
கொர்ர்ர்...!
கரும்புலி கதவைத் திறந்து வெளியே செல்ல முயன்றார். அப்போது காவலர்கள் இருவரும் கண்விழித்தார்கள்.
ஏய்... அவன் தப்பிக்கிறான்!
?

உடனே கரும்புலி இருவரையும் கடுமையாகத் தாக்கினார்.
என்னை உங்களால் தடுக்க முடியாது!
ஆ..!
அம்மா..!


ஏய்... எங்களிடமிருந்து நீ தப்ப முடியாது!
டுமீல்..!
காவலர்கள் கரும்புலியை சுட்டுத்தள்ளினார்கள்


ஏய்... அவன் வெடிமருந்து வைத்திருக்கும் குடோனுக்கு ஓடுகிறான்!
சுட்டு விடாதே!


கரும்புலி பல்டி அடித்துக் கொண்டே தாவிச் சென்றார்.
!

டிசோசா துப்பாக்கிச் சத்தம் கேட்டு எழுந்தான்.
என்ன துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது!
வில்சன்! வா என்னுடன்!
வெடிமருந்து குடோனுக்கு அருகே அல்லவா துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது!

ஏய்... முட்டாள்!
நிறுத்து!
ஏய்...
துப்பாக்கியை
கீழே போடுடா!
பாஸ்!

டிசோசா பதறிப் போனான்.
ஏய்... சுடாதே!
சுட்டால் நாம் எல்லாம்
தூள் தூளாக சிதறிப்
போய்விடுவோம்!

டிசோசா கட்டளையிட்டான்.

கரும்புலி ஆயுதக் கிடங்கில் இருந்தார்.




இதை வைத்துக்கொண்டு தப்பிவிட வேண்டியதுதான் !

பாஸ் ! முகமூடி தப்பிவிட்டான் !
முட்டாள் ! இந்த தீவுக்குள்தான் இருப்பான் ! நன்றாகத் தேடுங்கள் !

கரும்புலி பதுங்கி பதுங்கிச் சென்றார்.
எப்படியாவது மலை உச்சிக்குச் சென்றுவிட வேண்டும்!
கடுமையான முயற்சிக்குப் பிறகு கரும்புலி மலை உச்சியை அடைந்தார்.
கொள்ளையர்களின் முகாம் முழுக்க இங்கிருந்து தெளிவாகத் தெரிகிறது!
உடனே கரும்புலி லேசர் துப்பாக்கியை இயக்கினார்.
டமார்
அடுத்த நொடி—வெடிமருந்துக் கிடங்கு, ஆயுதக் கிடங்கு என்று எல்லாமே வெடித்துச் சிதறியது.


இத்தோடு கொள்ளையர் படைக்கு, முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன்!
டமார்!
சதிகார நாசசக்தி அழிந்துவிட்டது. இனி திரும்ப வேண்டியதுதான்!


அடுத்ததாக கரும்புலி அந்தத் தீவை விட்டு புறப்பட்டார்.
ஆற்றை நீந்திக் கடந்தார்.
நல்லவேளை வெடிமருந்து தீவில் வெடித்துச் சிதறியது. இதனால் காட்டில் உள்ள மிருகங்களுக்கும், தாவரங்களுக்கும் எந்த பாதிப்பும் ஏற்பட்டு இருக்காது!

அட! இந்த லேசர் துப்பாக்கியை வேறு கையோடு எடுத்து வந்துவிட்டேன்!
இந்த லேசர் துப்பாக்கியை முதலில் ஏதாவது மலைக்குகையில் மறைத்து வைக்க வேண்டும்!
கரும்புலி காட்டுக்குள் தேடி ஒரு மலைக்குகையை கண்டு பிடித்தார்.
இந்த குகைக்குள் மனிதர்கள் யாரும் நுழைய முடியாது. மிருகங்கள் நுழைந்தால் அதற்கு இந்த ஆயுதம் தேவைப்படுவதில்லை!


கரும்புலி அடுத்து தலைவரை சந்தித்தார்.
கரும்புலி! அந்த கயவர்களை கண்டுபிடித்தாயா?
ஆமாம் தலைவரே! இனி அவர்களால் எந்த பிரச்சினையும் ஏற்படாது!

யார் அவர்கள்? இங்கே எதற்கு வந்தார்கள்!
அவர்கள் துரோகிகள்! சொந்த நாட்டையே அந்நியர்களுக்கு விற்கத் துணிந்தவர்கள்!



முட்டை சாதனை!

படத்திலிருக்கும் புரசை நித்யன் என்பவர் கோழி முட்டையில் 300 படங்கள் வரைந்து சாதனை படைத்திருக்கிறார். விநாயகர், அம்மன், ரஜினி, கமல், உலக அதிசயங்கள், காய்கறிகள், இசைக்கருவிகள் என்று பலவற்றை ஒரு சிறிய முட்டையில் வரைந்திருக்கிறார்.

300 படங்களை வரைய நித்யனுக்கு 5 மணி நேரம் ஆகியிருக்கிறது. இதுதான் தன்னுடைய முதல் முயற்சி என்கிறார். அடுத்ததாக விரல் நகத்தில் 40-க்கும் மேற்பட்ட படங்களை வரைய தயாராகி



வருகிறார். அரிசியிலும் பல சாதனைகளை படைக்க மிகவும் ஆர்வமாய் இருக்கிறார். அவருக்கு வயது 22 ஆகிறது!

படக்கதை தொடர் – 7

முகமூடி வீரர் மாயாவி

அட மாயாவி நீங்களா?
உன்னைத் தேடித்தான் நான் வந்தேன்!
இங்கிருந்து என்னை விடமாட்டார்களே?
வாரன்! இங்கு என்ன நடக்கிறது?
மரண விளையாட்டு நடக்கிறது!
நரகத்தைப் பற்றி முழுமையாகச் சொல்!
இது தனி உலகம்! குற்றவாளிகள்தான் நரகத்தை ஆட்சி செய்கிறார்கள்!
முன்பு வெளியில் இருந்து உணவு கிடைத்தது!
ஆனால் இப்போது இங்கேயே பயிர்களை பயிர் செய்கிறார்கள்!

உணவுத் தட்டுப்பாட்டினால் தினமும் மரண விளையாட்டுத்தான் நடக்கிறது!
இதுதான் இங்கு சட்டம்!
ஏய்... யார் அவன்? புதியவனாகத் தெரிகிறதே!
மாயாவி வாரனை அழைத்தார்.
வாரன்! வா நாம் போகலாம்!
ஏய்... டெவில்! ஏன் சத்தம் போடுகிறாய்!
உர்... ர்ர்...
ஒருவன் மாயாவியை தாக்க முயன்றான்.
தொலைந்து போ!

புதியவர்களை இப்படித்தான் வரவேற்பீர்களா?
ஆ...! ஆ...!
மாயாவி அவன் ஆயுதத்தை பறித்தார்.
கும்...!
ஆ...!
அப்படிப் போடு!
உடனே அவன் கத்தியை எடுத்தான்.
மாயாவிவிட்ட ஒரே குத்தில் அவன் கத்தி எகிறி விழுந்தது.
கும்...
பிறகு மாயாவி அவன் காலைப் பிடித்து தூக்கினார்.

மாயாவி அவனைத் தூக்கி வீசினார்.
??!!
அவன் தொபீர் என்று கீழே விழுந்தான்.
தொபீர்!
வாரன்! இனி புறப்படலாம்?
தலைவன் விடமாட்டானே?
தலைவன் யார்?
தலைவன் வந்தான்.
ஏய்... யார் நீ? இங்கே, எப்படி வந்தாய்?
இவர்தான் தலைவர்?
வாரனின் நண்பன்!
உனக்கு பைத்தியமா? இங்கே வந்தவர்கள் திரும்பிப் போக முடியாது!
வாரன்... அவனுடன் சண்டையிடு!
சுற்றியிருந்தவர்கள் குரல் கொடுத்தார்கள்.
(தொடரும்)

சாம்பல் கயிறு

பேராசிரியர் எ. சோதி

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். தன்னைவிடப் பெரிய அறிவாளி யாரும் இருக்க முடியாது என்று நினைத்தான் அவன்.

அரசவை கூடியது. தன் அமைச்சனைப் பார்த்து "நம் நாட்டிலேயே சிறந்த அறிஞன் யார்?" என்று பெருமையுடன் கேட்டான் அவன்.

பதிலாகத் தன் பெயர் வரும் என்று எதிர்பார்த்தான் அவன்.

ஆனால் அமைச்சனோ, "அரசே! நம் நாட்டில் உள்ள மதியழகன் என்பவனே சிறந்த அறிஞன்" என்று பதில் சொன்னான்.

கோபம் கொண்ட அரசன், "நீ அறிவாளி என்று சொன்ன அந்த மதியழகனை நான் முட்டாள் என்று நிறுவுகிறேன்" என்றான்.

தன் வீரர்களை அழைத்து "நீங்கள் உடனே சென்று அந்த மதியழகனை அழைத்து வாருங்கள்" என்று கட்டளை இட்டான் அரசன்.

அரண்மனைக்கு வந்தான் மதியழகன்.

அவனைப் பார்த்து அரசன், "எல்லோரும் உன்னை அறிஞன் என்று சொல்கிறார்கள். நீ அறிஞனா இல்லையா என்பதை அறிய உனக்கு ஒரு சோதனை வைக்கிறேன். நீ அந்தச் சோதனையில் வெற்றி பெற்றால் விலை மதிப்பற்ற பரிசுகளைப் பெறலாம். அதன்பிறகு என்னால் உனக்கு எந்தத் தொல்லையும் வராது. மாறாக நீ தோல்வியடைந்தால் உன் உடலில் உயிர் இருக்காது" என்றான்.

"அரசே! என்ன சோதனை? சொல்லுங்கள்" என்று கேட்டான் மதியழகன்.

"நீ சாம்பலைக் கொண்டு கயிறு செய்ய வேண்டும். அந்தக் கயிற்றால் அரண்மனைச் சுவரைச் சுற்றி கட்டவேண்டும். இதுதான் சோதனை" என்றான் அரசன்.

அவையில் இருந்தவர்கள், 'அறிஞனைக் கொலை செய்ய அரசன் முடிவு செய்துவிட்டான். அதனால்தான் யாராலும் செய்ய இயலாத செயலைச் செய்யச் சொல்கிறான்' என்று நினைத்தனர்.

கம்பீரமாக நின்ற மதியழகன், "அரசே! எனக்கு ஒரு வாரம் தவணை கொடுங்கள். அறிவினால் முடியாதது இல்லை என்பதை உணர்த்துகின்றேன். இன்றைய எட்டாம் நாள் அரண்மனைச் சுவர் சாம்பல் கயிறால் கட்டப்பட்டிருக்கும்" என்றான்.

“நீ கேட்டபடி உனக்கு ஒரு வாரம் தவணை தருகிறேன்” என்றான் அரசன்.

வீட்டிற்கு வந்த அவன் வைக்கோலைக் கொண்டு நீண்ட கயிறு செய்தான். ஏழாம் நாள் இரவு யாருக்கும் தெரியாமல் அந்த வைக்கோல் கயிற்றால் அரண்மனைச் சுவரைச் சுற்றிக் கட்டினான்.

பிறகு அந்த வைக்கோல் கயிற்றில் எண்ணெய் தெளித்தான். அந்தக் கயிற்றின் இரு முனைகளிலும் தீ வைத்தான். தீ சிறிது சிறிதாக எரிந்துகொண்டே சென்றது. வைக்கோல் முழுமையும் எரிந்து சாம்பல் மட்டும் கயிறு வடிவத்தில் சுவரில் இருந்தது.

காலையில், அங்கு வந்த வீரர்கள் சுவரைச் சுற்றிச் சாம்பல் கயிறு இருப்பதை பார்த்தனர். அரசனிடம் சென்று இந்தச் செய்தியைச் சொன்னார்கள்.

வியப்படைந்த அரசன் வெளியே வந்தான். அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. அரண்மனைச் சுவரைச் சுற்றிச் சாம்பல் கயிறு இருந்தது.

மதியழகனை அழைத்த அரசன், “உண்மையிலேயே நீ பெரிய அறிஞன்தான்” என்று பாராட்டித் தான் சொன்னபடியே பரிசுகள் தந்தான்.

பேனா பேசுகிறது!

படக்கதையைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: பேனா பேசுகிறது, "ராணி காமிக்ஸ்", சென்னை–600 007.

'ராணி காமிக்ஸ்'சில் வெளிவந்த "கார் வேட்டை" படக்கதை படித்தேன்... ரீனாவின் தூள் கிளப்பும் சாகசங்கள் அற்புதம்! ஆல்டோவின் காரை திசை திருப்பிய ரீனா என் மனதில் நீங்கா இடம் பிடித்துவிட்டாள்!

க. பன்னீர்செல்வம், நாகூர்.

பெண் டார்ஜான் ரீனா தோன்றிய "கார் வேட்டை" படித்தேன்! மிக அருமை! ரீனாவின் தூள்கிளப்பும் சாகசங்கள் மிக மிக அருமை! புதுமை என்றால் அது "ராணி காமிக்ஸ்"தான்!

டி. சிதம்பரம், குளத்தூர்.

பெண் டார்ஜான் ரீனாவின் "கார் வேட்டை" படிக்கப் படிக்க விறுவிறுப்பாக இருந்தது!

பா. மலையரசன், சென்னை.

"கார் வேட்டை"யில் கடைசியில் ரீனாவின் கார் பந்தயம் என்னை மெய் சிலிர்க்க வைத்துவிட்டது!

கு. செல்வி, இடையாத்தூர்.

"கார் வேட்டை" படக்கதை படித்தேன். அருமையாக உள்ளது. மெக்கானிக்குகளாலும் கார் கண்டுபிடிக்க முடியும் என்பதை இந்த கதை உணர்த்தியது. ரீனாவின் அதிரடி சாகசங்கள் சூப்பர்!

ம.அ. சூரியபிரதமன், சிவகங்கை.

'ராணி காமிக்ஸ்'சில் வெளிவந்த பெண் டார்ஜான் ரீனா தோன்றும் "கார் வேட்டை" மிகவும் அற்புதமாக இருக்கிறது! மாயாவி தொடர்கதை எனக்கு படிக்க மிகவும் பிடித்து இருக்கிறது!

த. சின்னச்சாமி, பழையூர்.

"கார் வேட்டை" படித்தேன்... வெகு அற்புதம்! மாயாவி தொடர்கதை படித்தேன்... அதுவும் சூப்பராக இருந்தது! கார் வேட்டை என்றால் கார் வேட்டைதான்!

எ. கோபி, சங்ககிரி.

"கார் வேட்டை" படக்கதையில் அட்டைப்படம் வெகு ஜோர்! பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருந்தது!

தி. செல்வம், மதுரை.

மெக்கானிக்குகளும், என்ஜினீயர்களும் இரு துருவங்களாக இருந்தவர்களை ஒன்று சேர வைத்த ரீனாவின் திறமை பாராட்டுக்குரியது!

சி. ஆனந்த், சென்னை.

'ராணி காமிக்ஸ்'சில் வெளிவந்த "கார் வேட்டை" கதையை படித்தேன்... மிகவும் அற்புதம்! முகமூடி வீரர் மாயாவியின் தொடர் கதையும், மிக மிக சூப்பர்! அடுத்த இதழை படிக்க ஆவலாக இருக்கிறேன்!

என். ராமச்சந்திரன், டி. சகுந்தலா, சித்தளந்தூர்.

'ராணி காமிக்ஸ்'சில் வெளிவந்த "கார் வேட்டை" படக்கதை படித்தேன்... ரீனாவின் தூள் கிளப்பும் சாகசங்கள் அற்புதம்! படிக்கவும், சிந்திக்கவும் மட்டுமல்லாமல்; நாட்டுக்கு தேவையான கதைகளை வழங்கும் "ராணி காமிக்ஸ்"சை பாராட்டுகிறேன்!

த. விஜயேந்திரன், சிறுநகர் கிராமம்.

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

ஒரு நாளுக்கு 150 பைசா செலவு



650 பக்கங்கள் 3 இன் 1 இங்கிலீஷ் கோர்ஸ் உடன் புத்தாண்டுப்பரிசு ஒரு டைரி இலவசம்!



கே.வி.ஆர். ஆங்கில கோர்ஸின் விவரங்கள்

கே.வி.ஆர் 3 இன் 1 தபால் வழி ஆங்கில கோர்ஸ் ரூ. 200/- க்கு வி.பி.பி.யில் அனுப்புகிறோம் இந்த கோர்ஸ் 5 மாதங்கள், அதாவது 150 நாட்கள். உங்களுக்கு ஒரு நாளைக்கு 150 காசுகள் செலவு மட்டுமே! இது ஒரு காப்பிக்கான செலவைவிட மிக குறைவானது. புத்தாண்டு பரிசாக ஒரு டைரியும் இலவசமாக பெறுங்கள்.

இந்த நல்ல வாய்ப்பை உடனே பயன்படுத்திக்கொள்ளுங்கள்! இந்தக்கூப்பனை பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள்!

K.V.R. INSTITUTE

637

77, HABIBULLAH ROAD, T. NAGAR, CHENNAI - 600 017.

எனக்கு 650 பக்கங்கள் 3 இன் 1 ஆங்கில கோர்ஸ் மற்றும் புத்தாண்டுப்பரிசான இலவச டைரி ஆகியவற்றை சேர்த்து வி.பி.பி. ரூ. 200/- க்கு அனுப்புங்கள். நான் உடனேயே தபால்காரரிடம் பணத்தைச்செலுத்திப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்கிறேன்.

Name : ....

Address : ....

.... PIN

அடுத்த காமிக்ஸ்

லேடி ஜேம்ஸ்பாண்டு

மாடஸ்தி

தோன்றும்

கடத்தல்காரர்கள்

கடத்தல்காரர்களிடம் சிக்கிய வில்லியை மாடஸ்தி எப்படி மீட்கிறார், என்பதே கதை!

பக்கத்துக்கு பக்கம் விறுவிறுப்பு!

பிப்ரவரி 1-ந்தேதி இதழில் வெளிவருகிறது!

படிக்கத் தவறாதீர்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

300 ரூபாய்களுக்கு கே.வி.ஆர் ஆர்ட் கோர்ஸ் ஃப்ரீ

இதை இலவசமாக பெறும் அதிர்ஷ்டசாலிகள் 50,000

சுலபமாக படம் வரைய கற்றுத்தரும் சிம்பிள் ஆர்ட் கோர்ஸ் இது

இப்படி, இப்படி, இப்படி



இப்படி, இப்படி, இப்படி

1 ல் இருந்து 12 எண்களில் படம்

சித்திரம் வரைவது சிலருக்கு ஹாபி. சிலருக்கு அது தொழில். எந்த வயதிலும் வீட்டிலிருந்தபடியே சுலபமாகக் கற்றுக் கொள்ள முடியும். 300/- ரூபாய் மதிப்புள்ள இந்த கோர்ஸ் இலவசமாகத் தரப்படும். விளம்பரத்திற்காக இவ்வாறு கோர்ஸ்களை ஃப்ரீயாக அளிப்பதில் கே.வி.ஆர் ஒரு ரெக்கார்டை ஏற்படுத்தியுள்ளது. மற்றவர்கள் எவரும் இவ்வாறு அளிப்பதில்லை. அதனால் உடனே இதை உபயோகித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுங்கள். இந்த நல்ல வாய்ப்பை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்.

5 கோர்ஸ்கள்

1. ஈஸி டிராயிங் கோர்ஸ்
2. ஈஸி கார்ட்டூன் கோர்ஸ்
3. ஈஸி அனாடமி கோர்ஸ்
4. ஜாமெட்ரிகல் ஆர்ட் கோர்ஸ்
5. கமர்ஷியல் ஆர்ட் கோர்ஸ்

5 கோர்ஸ்கள்

இந்த கோர்ஸ்கள் ஃப்ரீ

இனி உங்கள் வீட்டில் அனைவரும் சுலபமாக படம் வரையலாம்





இந்த ஃப்ரீ கோர்ஸை தினமும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு அனுப்ப வேண்டியிருக்கும். அதனால் இந்த ஃப்ரீ கோர்ஸ் உங்களை வந்தடைய குறைந்தது 10 நாட்கள் நீங்கள் காத்திருக்க வேண்டி இருக்கும்.

கே.வி.ஆர். சிம்பிள் ஆர்ட் கோர்ஸ் தனித்துவம்

• எவராலும் சுலபமாக படம் வரைய கற்றுக்கொள்ளமுடியும். "டிரிக் ஃபோட்டோ கிராபியைப் போல • டிரிக் டிராயிங்" கிற்கான சூட்சுசமங்கள் • ஹாபி, பணம், புகழ், பெருமை, அனைத்தும் கிட்டும். • மொத்தம் 5 ஆர்ட் கோர்ஸ்கள் அடங்கிய ஆர்ட் கோர்ஸ் பேக்கேஜ் இது.

இலவசமாக இவ்வாறு கோர்சை பெற்றுக் கொள்ளுங்கள்

• இந்த பத்திரிகையிலுள்ள கூப்பனில் உங்களது விவரங்களை எழுதி அனுப்புங்கள். • ஜெராக்ஸ் மற்றும் கார்டுகளின் மீது எழுதியவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. • ஒரு கோர்ஸை இலவசமாக பெற ஒரு கூப்பனை அனுப்பவும். • உங்களுடைய நண்பருக்குத் தரவிரும்பினால் மற்றொரு பத்திரிகையை வாங்கி, அந்தக் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். • கவர் மீது 3ரு ஸ்டாம்பை தற்பொழுதைய விலைமதிப்பின்படி ஒட்டவேண்டும். • கூப்பனில் உள்ள நியமம், நிபந்தனைகளின் படி இந்த ஃப்ரீ கோர்ஸ் அளிக்கப்படும். • முதலில் அனுப்பும் 50 ஆயிரம் பேருக்கே இது அளிக்கப்படும். • இந்த கோர்ஸ் முழுவதும் இலவசம். ஆனால் இதை பெற்றுக்கொள்ளும் செலவுகளை நீங்களே ஏற்க வேண்டும்.

கூப்பனை பூர்த்தி செய்து உடனே அனுப்பவும்

K.V.R. INSTITUTE 705

(Tamil Free Art Course Scheme)

P.B. No. 1020, 77. Habibullah Road, T. Nagar, Chennai - 17.

எனக்கு ரூ. 300 விலை மதிப்புள்ள கே.வி.ஆர். ஈஸி டிராயிங் கோர்ஸ், ஈஸி கார்ட்டூன் கோர்ஸ், ஈஸி அனாடமி கோர்ஸ், ஜாமெட்ரிகல் ஆர்ட் கோர்ஸ், கமர்ஷியல் ஆர்ட் கோர்ஸ் பேக்கேஜை ஃப்ரீயாக அனுப்பவும். தபால் செலவு + பேக்கேஜ் + ஃபார்வார்டிங் + விளம்பரச் செலவுகளுக்கு ரூ 100ஐ தபால்காரரிடம் செலுத்தி எனது ஃப்ரீ கே.வி.ஆர் சிம்பிள் மொத்தம் இந்த 5 கோர்ஸ்களின் 'சிம்பிள் ஆர்ட் கோர்ஸ்' பாக்கெட்டை பெற்றுக் கொள்வேனென்று உறுதியளிக்கிறேன். இந்த ஃப்ரீ கோர்ஸ் வாய்ப்பளித்ததற்காக உங்களுக்கு நன்றி.

(உங்களது விலாசத்தை நன்கு புரியும்படியாக ஆங்கிலத்தில் எழுதவும், இல்லாவிடில் கோர்ஸை அனுப்ப முடியாது)

Name ....

Address ....

....

.... Pincode

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

- * அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
- * புராண படக்கதை
- * துப்பறியும் படக்கதை
- * குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- * மாயாஜால சிறுவர் தொடர்கதை
- * சிறுகதைகள்
- * பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

Regd. with the Registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971–8567

January 16, 2000.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Marketed by: Gujarat Co-op. Milk Marketing Federation Ltd.,
Anand 388001. E-mail: gcmmf@amul.com
Visit Amul on the Internet at - www.amul.com

daCunha/AB/25/99